

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு சென்னை, அண்ணா அறிவாலயத்தில், புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள அலுவலக அறையில் அமர்த்தினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், துணை பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் உள்ளனர்.



திருச்சியில் நடைபெற்ற சௌதி அரேபியா அயலகத் தமிழர் அணியின் நிர்வாகி பி.ஆர்.எம். ஆரிப்மக்பூல் மகள் எம்.ஏ. அஷ்ரப் நிசா மணமகன் எம்.இம்தியாஸ் அகமது ஆகியோரது திருமண விழாவில் தலைமை நிலையச் செயலாளரும் வீட்டு வசதி வாரியத் தலைவருமான எஸ்.பூச்சி முருகன், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் துணைத் தலைவர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் இறையன்பன் குத்தூஸ், அயலகத் தமிழர் நலத் துறை உறுப்பினர் புகழேந்தி, சௌதி அரேபியா அயலக அணியின் நிர்வாகி வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



மூத்த பத்திரிகையாளர் சின்னக்குத்தூசி அவர்களின் 91ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் 21, 2025 அன்று மயிலாப்பூர் கவிக்கோ அரங்கில் திராவிட இயக்கச் சிந்தனையாளர் திருச்சி செல்வேந்திரனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும், 1 லட்ச ரூபாய் நிதியும் வழங்கப்பட்டது. விருதினை தமிழ்த் தேசிய இயக்க நிறுவனரும், மூத்த அரசியல்வாதியுமான பழ.நெடுமாறன் வழங்கிக் கௌரவித்தார். விழாவுக்கு திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசர் தலைமையேற்க, விழாவில் பங்கேற்கவந்த அனைவரையும் நக்கீரன் ஆசிரியர் நக்கீரன் கோபால் வரவேற்றுப் பேசினார்.



ஈரோடு மாவட்டம் புன்செய்ப் புளியம்பட்டி கல்வி ஊக்கத்தொகை: தொடர்ந்து ஐந்தாம் ஆண்டாக முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு காலை 10 மணி அளவில் என்.எம் மஹாலில் நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நகரச் செயலாளர் நகர்மன்ற துணைத் தலைவர் பி.ஏ.சிதம்பரம் ஏற்பாட்டில், மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் அவர்களின் தலைமையில், தலைமை பொதுக்குழு உறுப்பினர் வெ.ஜெயராஜ், நகர அவைத் தலைவர் எஸ்.ஏ.சாகுல் ஹமீது முன்னிலையில் 22 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 2,83,500/ மதிப்பில் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் நகரத் துணைச் செயலாளர் நகர்மன்ற தலைவர் தி.ஜனார்த்தனன் அவர்கள், நகரமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர்.மயில்சாமி. மாவட்ட பிரதிநிதி ஏ.இராஜேந்திரன், கழக முன்னோடிகள், மாநில, மாவட்ட நகர நிர்வாகிகள், வார்டு நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள்ள், நகர்மன்ற உறுப்பினர்கள். இளைஞரணி மகளிரணி, மாணவரணி, சார்பு அணியினர், பெற்றோர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.813 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள்! ரூ.9.68 கோடியில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 25-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் சார்பில் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி, சி.ஐ.டி குடியிருப்பு முதல் தெருவில் 3.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 113 தெருக்களில் வாழும் 50,000 பொது மக்கள் பயன்பெறும் வகையில் 6.25 எம்.எல்.டி செயல்திறன் கொண்ட H2S வாயு கட்டுப்பாட்டு அமைப்புடன் கூடிய சாலையோர கழிவு நீர் உந்து நிலையத்தை திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு116க்குட்பட்ட டாக்டர் பெசன்ட் சாலையில் 9.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 படுக்கை வசதியுடன் கட்டப்படவுள்ள நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனைக் கட்டடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

மேலும், வார்டு114, பங்காரு தெரு சென்னை நடுநிலைப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ், 2.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 7 வகுப்பறைகள், 1 சமையலறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடத்தை துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இராயபுரம் மண்டலம், வார்டு63, கொய்யாத்தோப்பு, கோமளீஸ்வரன் பேட்டை நாகப்பன் தெருவில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ், 1.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் 6 வகுப்பறைகளுடன் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டடத்தினையும் திறந்து வைத்தார்.

பின்னர், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு114க்குட்பட்ட லாக் நகரில் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 1.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட முதல் தளத்தில் மேடையுடன் கூடிய பல்நோக்குக் கட்டடத்தினை துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் டி.ஜி.வினய், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி வே. கமலா செழியன், சிவராஜ சேகரன், வட்டார துணை ஆணையர்கள் கே.ஜே.பிரவீன் குமார், கட்டா ரவி தேஜா, சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் கௌரவ் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தி.மு.க. மாணவர் அணி

# முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கான கருத்தரங்கம்!

### மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை" முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திராவிடம், தமிழ், தமிழர் நலன், சமூகநீதிச் சிந்தனைகளைப் பரப்பும் வகையில் மாணவர் அணி சார்பில் கல்லூரி மாணவர்களுக்கான கருத்தரங்கம், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர் ஒத்துழைப்போடு நடைபெறும்.

| வ.எண் | தேதி | மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 1 | ஜூன் 26, 2025 | புதுக்கோட்டை வடக்கு | ராஜம் மஹால், அரிமளம் ரோடு, புதுக்கோட்டை |
| 2 | ஜூன் 27, 2025 | சென்னை வடக்கு | அறிவகம் திருமண மாளிகை, இராயபுரம் |
| 3 | ஜூன் 29, 2025 | திருச்சி வடக்கு | எஸ்.பி.மஹால், தா.பேட்டை ரோடு, முசிறி |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.06.2025

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.

### 'நீட்' தேர்வு: முதல் கோணல் முற்றிலும் கோணல்!

# ஒவ்வொரு நிலையிலும் நிறைந்திருப்பது குளறுபடிகளும் முறைகேடுகளும்தான்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூன் 25 -**

**NEET UG 2025 தேர்வில் முறைகேடு செய்து, ரூ.90 லட்சம் பணம் பெற்றுக்கொண்டு, குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்கள் அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கை பெற உதவியதாக மகாராஷ்டிராவைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் மீது CBI வழக்கு பதிவு செய்துள்ளது தொடர்பாக கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :**

தரம், தரம் என்றார்கள்!

NEET தேர்வின் ஆதி முதல் அந்தம் வரை பணம், பணம்தான் விளையாடுகிறது.

நீட் எனும் தேர்வுமுறையே ஒரு moral ஊழல்! அது போதாதென்று, வினாத்தாள் தொடங்கி, தேர்வறை, முடிவுகள் வெளியீடு வரை ஒவ்வொரு நிலையிலும் நிறைந்திருப்பது குளறுபடிகளும் முறைகேடுகளும்தான்.

நீட் முதல் கோணல் முற்றிலும் கோணல்!

RSS BJP மாநாடுகளில் showpieceஆக உட்கார நேரமிருக்கும் அ.தி.மு.க.வினருக்கு இவற்றை எதிர்த்து, தங்கள் எஜமானர்களிடம் பேச நேரமோ, மானமோ இல்லை!"

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 124 வது நாள்!

## திரு.வி.க. நகர் தெற்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, ஜூன் 25-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 124 ஆம் நாளான கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 75 கே.எச் ரோடு, 2) வட்டம் 75 (அ) எஸ்.எஸ்.புரம், சென்னை. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம். சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா. வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ் செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ் குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர். ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*



நாகை மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் நாகையில் தளபதி அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன்மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கேஸ் வி.செந்தில், டி.பாலகுரு, மாவட்ட பொறியாளர் அணி தலைவர் ராஜேந்திரபிரசாத், துணைத்தலைவர் சண்முகராஜேஸ்வரன், துணை அமைப்பாளர் க.சுதாகர், டி.பாலகுரு, செந்தில்குமார் மற்றும் பலர் உள்ளனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் கீழ்வேளூரில் நடைபெற்றது.கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என் கௌதமன் பேசினார் . உடன் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர், கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினரும்.கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ப.கோவிந்தராஜன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பழனியப்பன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ஏ.எஸ்.என். ராஜா, ஒன்றிய நிர்வாகிகள் ஏ.வேதநாயகம், தங்க மனோகரன், ஆர்.நடராஜன், ரவிக்குமார், பாரதிமோகன், சேக் முகமது, மற்றும் பலர் உள்ளனர்.